உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ பத்திரகிரியார் புராணம்.

திரிசிரபுரம்

வித்வசிரோமணியாகிய ம-ள-ள-ஸ்ரீ

சி. தியாகராஜ செட்டியாரவர்கள் மாணாக்கரும்,

கோயம்புத்தூர்க் காலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதரும

புரவிப்பாளையம் சமஸ்தான வித்வானும்

ஆகிய

கும்பகோணம்

ஆர். சபாபதிபிள்ளை இயற்றியது.

இஃது

திருக்கயிலாச பரம்பரைத் திருவாவடுதுறை

மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ

அம்பலவாண தேசிகரவர்கள்

முன்னிலையில் அரங்கேற்றுவித்துத்

திருவிடைமருதூர்க் குருபூசை

மடாலயவிசாரணை

காசி, வாசி, ஆ. நடேசதேசிகர் முயற்சியால்

ஜயவர்த்தன விலாச பிரசில் பதிப்பிக்கப்பட்டது

கும்பகோணம்.

இதன் விலை] 1914. [அணா 3

Copy Right Registered.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

உ

சிவமயம்

# முகவுரை.

ஸ்ரீ, உஞ்சேனைமாகாளமென்னும்சிவதலத்தை இராஜதானியாகக்கொண்டு, துளுவ நாட்டை ஆண்டு வந்த ஸ்ரீ பத்திரகிரியென்னும் அரசர் பெருமான், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதமுதலியஉத்தம குணங்கள் வாய்த்து அதிதீவிரபக்குவராயிருந்த காலத்தில், திக்குப்பாலகருள் ஒருவராகிய குபேரன், சிவபெருமானுடைய கட்டளையால் காவிரிப்பூம்பட்டினத்தில் சிவநேசச்செட்டியாருக்குத்திருக்குமாரராய்ப் பிறந்துவளர்ந்து வருநாள் ஐந்து வயதில் தந்தையார் சிவபதமடையப்பின் தாயாரால் கல்விகற்பிக்கச்சிவாகமங்கள் முதலிய நூல்களைக்கற்றுணர்ந்து மருதவாணர் திருவருளால் துறவுபூண்டு தலயாத்திரை செய்துவருநாள், துளுவநாட்டை யடைந்து திருக்கோகர்ன்ன முதலியதலங்களைத் தரிசித்து திருஉஞ்சேனை மாகாளத்தில்சென்று ஸ்ரீ மாகாளேச்சுரரை வணங்கி அவ்வூர்ச்சிறுபுறங்காட்டிலுள்ள விநாயகர் ஆலயத்தில் சிவயோகத்தில் வீற்றிருந்தனர். அப்பொழுது சிலதிருடர்கள் தாம் வேண்டிச்சென்றபடி அரசன் அரண்மனையில் பெறும் பொருள் கிடைத்தமையால் ஓர் இரதநமாலையைப்பிள்ளையாருக்குச் சாத்திச்சென்றனர். இருட்காலமானதால் அது திருவெண்காடர் தோளில் விழுந்திருக்கக்கண்ட அரசன் காவலாளர்கள் அவரைக்கள்வர்தலைவனெனக்கொண்டு அரசனுக்க,றிவிக்க அரசன்கழுவேற்றுகவென அவரும் அடிகளைக்கழுமரத்தருகிற் கொண்டுசென்று நிற்க, அடிகள்கழுமரத்தைநோக்கி என்செயலாவது என்னும் திருப்பாடலைப்பாடியெம்பெருமானைச்சிந்தித்து நிற்ப, அக்கழுமரந்தீப்பற்றி வெந்தொழிந்தது. இதுகண்டோர் அரசனுக்கறிவிப்ப, அரச

ணடுங்கி ஓடோடியும் வந்து அடிகள் திருவடிகளில் அடியற்றபனைபோல வீழ்ந்து ஆராயாதுசெய்த இப்பெரும்பிழையைப் பொறுத்தருள்கவெனப்பலகால் வேண்ட ஐயர் திருவருள் கூர்ந்து சட்சுதீக்ஷை செய்யப்பெற்று அரசசெல்வமெல்லாந்துறந்து குருவருளின்படியே பலசிவஸ்தலங்களையும் பணிந்து திருவிடைமருதூரைச்சார்ந்து ஆலயத்தின் மேற் கோபுரவாயிலிலிருந்து கொண்டு பிக்ஷை யேற்றுத் தமதாசிரியரை யுண்பித்துத்தாமுமுண்டு தம்மையாசிரியித்த நாயடியாளாகிய ஞானவல்லியுடன் ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் திருவருளால் உண்டாகிய ஜோதியில் இரண்டறக்கலந்தருளிய இப்பெரியோரது திவ்யசரிதத்தை, திருவிடைமருதூர்க் குருபூசைமடம் விசாரணை மகா-ள-ள-ஸ்ரீ காசிவாசி ஆ. நடேசதேசிகர்முதலிய சிலபெரியோர்கள் கேட்டுக்கொண்டதனாற் புராணமாகச் செய்யப்பட்டது.

இவருடையகாலம் தெரியவில்லை இதில் விடப்பட்டிருக்கும் பாகங்களை தெரிந்தோர் அறிவித்தால் மறுபதிப்பில் சேர்த்துச் செய்யப்படும்

இங்ஙனம்.
வையாபுரிப்பிள்ளை
மாணவர் தமிழ்ச்சங்கத்தலைவர்
பள்ளபாளையம்.

# விளம்பரம்

இப்புத்தகம் வேண்டுவோர் கும்பகோணம் பெரிய கடைவீதி ம,ள,ள. ஸ்ரீ கோவிந்தசாமிநாயுடு அவர்கள் புத்தகக்கடையிலும், நாமக்கல் போர்டுஹைஸ்கூல்தமிழ்ப்பண்டிதர் சி. ஆனையப்ப முதலியாரிடத்திலும், பள்ளபாளையம் மாணவர் தமிழ்ச்சங்கத் தலைவர் ஸ்ரீ வையாபுரிப் பிள்ளையிடத்திலும், திருவிடைமருதூர்க் குருபூஜைமடம் விசாரணை ஆ. நடேச தேசிகரிடத்திலும், எனனிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்.
ச. சோமசுந்தரப்பிள்ளை
ஸ்ரீ ஹயவதன விலாஸபிரஸ்
கும்பகோணம்

## சிறப்புப்பாயிரம்.

இப்புராணஞ்செய்தார் மூதன்மாணுக்கரும், நாமக்கல் போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்
ஆகிய
மதுக்கரை, சி. ஆனையப்பமுதலியார் இயற்றிய
கட்டளைக்கலித்துறை.

தேடும் பொருளுஞ்சிவன்கழலாமெனத் தேர்ந்துணர்ந்தே, ஓடும் பகையென்றுடைத்திட்ட மன்னர்தமொண்சரிதம், நாடும் பொருளணி சொல்லணியும்பெற நன்குரைத்தான், ஆடும்பிரானடிக்கன்பார் சபாபதியாரியனே.

இப்புராணஞ்செய்தார் மாணுக்கரும், கோயமுத்தூரைச் சார்ந்த பள்ளபாளையம் மாணவர் தமிழ்ச்சங்கத்தலைவரும் ஆகிய N. வையாபுரிப் பிள்ளை இயற்றிய
அறுசீரடியாசிரிய விருத்தம்.

பருதியென வகம்புறமு ஞானவொளி நிறைந்தபத்ர கிரியார் காதை, சுருதியென வுலகுகொளப் புராணமாத்தருகெனநற் றூயோர் வேண்டக், கருதரு செந் தமிழ்ப்பாவாற்பாடியன்பர் மனமுருகிக் களிப்பத் தந்தான், பொருவருமின் புலவர் புகழ்குடந்தை வளர் சபாதியெம் புலவரேறே.

இப்புராணஞ் செய்தார் மாணுக்கரும், உடுமலைப்பேட்டை போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய
மு சிவகுருநாத பிள்ளை இயற்றிய
கட்டளைக்கலித்துறை

அல்லார் களத்தெம் மருதீசரம்பொன்னடியடைந்த
எல்லாரும் பத்ரகிரிச் சிவயோகி யெழிற்கதையை
வல்லார் கொளத்தமிழ்ப் பாவிற் புனைந்து வழங்கினனால்
கல்லார் பரவுங்குடந்தைச் சபாபதி நாவலனே.

இப்புராணஞ் செய்தார் மாணாக்கரும் செண்ட் மைக்கல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய தேவன்பாடி

சு. இராமசாமி முதலியார் இயற்றிய

எண்சீரடியாசிரியவிருத்தம்.

பண்மலிந்த மறைச்சிலம்பர் மருதவாணர், பதமடைந்த பத்
ரகிரிப்பெருமான்காதை, எண்மலிந்த செந்தமிழி னினியபா
வாலியற்றியருள்கென நல்லோரிசைப்பக்கேட்டு, மண்
மலிந்த புலவர்செவிக் கமுதமாக மதுரகவியாற் புனைந்து
வழங்கினாற், கண்மலிந்த பூம்பொழில்சூழ் குடந்தை
மேய, கவிஞர்புகழ் சபாபதிப்பேர்க்கவிவல்லோனே.

தற்சிறப்புப்பாயிரம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இந்துமுடிப் பெருமான்றண்ணருள் பெற்ற பத்ரகிரி
யேந்தல் காதை, செந்தமிழினியலேசனுஞ் செறிந்து சுவை
தரப் பாவிற்செய்து தந்தான் முந்துகவிவாணர்சிகாமணித்
தியாகராசனெனு முன்னோன்றன்பால், பைந்தமிழ்தேர்ந்
தோன் குடந்தைப் பதிசபாபதியெனும் பாவலவரேறே.

## பத்திரகிரியார் முத்தியடைந்த நாள்

நேரிசை வெண்பா.

ஓங்குபுகழ்வெண்காட்டேயடிகள் தண்ணருளைப்
பாங்குபெறவேபெற்ற பத்ரகிரி—யாங்கொளியாய்ச்
சித்திரைமாமகத்திற் சேர்ந்தனனே மாமருதூர்க்
கத்தனருளிற் கலந்து.

இது ஆன்றோர்வாக்கு.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ பத்திரகிரியார் புராணம்.

## பாயிரம்.

### காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமேவுசெஞ்சடையும் வெண்பிறையுந் தண்புனலும் பொ
ருந்தலீசன், 1மா.மேவுமதலையெனவுணர்த்தவயன்முதற்றே
வர்வணங்குந்தெய்வந் தாமேயென்பது2பெயராலுணர்த்தி
யருண்மும்மதமுந்தழையவோங்குந், தேமேவுமைங்கரச்சி
ந்துரத்துணைத்தாட் செங்கமலஞ்சென்னிசேர்ப்பாம். (1)

சிவபெருமான்.

பாலாழி கடைந்தமுதம் பண்ணவருக் கருளியபைந் து
ளப மாலை, மாலாகந் தழுவுதிரு மகண்முதலைத்தருநீழல்
வைகுந் தெய்வச், சேலாரும் விழிமடவார் 3களத்தணியு
மங்கலநாண் டூரா வண்ணம், 4ஆலால முண்டகளத் தழிகு
ழியா திருத்துமா னடியைத் தாழ்வாம். (2)

உமையம்மை.

மஞ்சுதவழ் மலையரையன் மகிழுவரு பசுமயிலை வளர்
சீர்க் காழி, விஞ்சுபுகழ்ச் சம்பந்த ருணஞானப் பாலுதவு
மென்பூங் கொங்கைக், கஞ்சமுகிழ்க் கொடியைமதற் காய்
ந்தபரன் 5திருவுளத்தைக் கவருஞ்சீர்த்தி, அஞ்சொலினங்
கிளிப்6பேட்டை யாரமுதையெக்காலுமகத்துள் வைப்பாம்.(

---

1 மா. என்னும் உரிச்சொல்-மூத்தபிள்ளையாரென்னும் பொ
ருளையுணர்த்தி நின்றது.

2. பெயர், விநாயகன் என்பது.

3. களம்-கண்டம்.

4. ஆலாலம்-நஞ்சு.

5. திருவுளத்தைக்கவர்தல்-மனதைத்தன்வசமாக்குதல்.

6. பேடு-பெண்பறவை.

விநாயகர்.

மறைபுகன்மக் திரத்துளுயர் பிரணவமக் திரப்பொரு ளாய் வயங்குந் தன்மை, நறைவிதழி புனைந்தெவர்க்கு மறி வுறுத்தி நான்முகத்தோன் றவஞ்செய் தின்ற, 1பிறைநுத லார் தமைமணந்து வேழமுகா சுரற்றடிந்து பிறங்கு விண்ணோர், குறைமுடித்துக் காத்தருளுங் குஞ்சரத்தை யஞ்சலித்துக் குறைகடீர்வாம். (4)

முருகக்கடவுள்.

வெள்ளிவரை யுறைபரம னுதல்விழியிற் பிறந்து2சர வணத்தின் மேவி, யெள்ளி3லறு மீன்முலைப்பா லினிதருந்தி விளையாடி யிமையோர்வேண்டக், கள்ளமனச் சூர்மாவைத் தடிந்தமரா வதிகாத்துக் களபக்கொங்கை, வள்ளியணி குஞ்சரியை மணந்தவறு முகதேவை வணக்கஞ்செய்வாம் (5

நந்திதேவர்.

அருளுருவா கியபரையோர் கூறுடையாரிடைச்சிவாக மங்க ளியாவும், தெருளுறக்கேட் டுணர்ந்துசன காதியருக் குபதேசஞ் செய்துவெள்ளிப், பெருவரையினுலவியா னடி பரவ வருதிருமால் பிரமன் விண்ணோர், மருமுடியிற் றூக்கி விலக் குறு4சூரற்கைத்தேவை வணக்கஞ்செய்வாம். (6)

கலைமகள்

எவ்வுலகுந் தந்தருண்மா மறையவன்றன் றிருமனையை யெங்குமாகி, யெவ்வுயிர்களுத்தோறுமிருப்பாளைப்படிகநிற மியைந்துளாளைச், செவ்வியவெண் 5சலசமல ருறைவாளைச் செம்பவளவிதழினளை, 6கவ்வி பொருவிழியாளை நாமகளையா ம்வணங்கிகலைகடீர்ப்பாம். (7)

---

1. பிறைநுதலார்-சித்தி, புத்தியென்னும் சத்திகள்.
2. சரவணம்-நாணல்.
3. அறுமீன்-கார்த்திகைப்பெண்கள்.
4. சூரல்-பிரம்பு.
5. சலசம்-தாமரை.
6. கவ்வி-மான்.

### சமயாசிரியர்.

வேதங்க ளிறுங்காணு விமலனைச்சுட் டிக்காட்டும்வேந் தைப் போற்றி, மாதங்க வுரிப்பெருமா னைக்கெழுத்தாற் கடல் கடந்தோன் மலர்த்தாள் போற்றி, பாதங்க ளேவ வரன்ற னைப்பரவை யிடைத்தூது பணித்தோற் போற்றி, யேதங்களறப்பானையெழிற்கோவையெழுதுவித்தோனிணை த்தாள்போற்றி. (8)

### தமிழாசிரியர்

திரைத்தலையகருங்கடனீர் செங்காத்தின் முகந்தருந்திச் செருக்கார்விந்தம், தரைத்தலையினுறவழுத்தி வில்வலன்வா தாவியைச் சங்கரித்துப்பைங்தேன், விரைத்தலைய துழாய் மாலைச் சிவலிங்கவடிவாக்கி விண்ணுருந்தென், வரைத்தலை யிற் றிருக்துநெடுந் தமிழ்விரித்த குறுமுனிதாள் வணங்கி வாழ்வாம். (9

### அவையடக்கம்

#### எழுசீரடியாசிரியவிருத்தம்

படியினோர் புகழுந் திருவெண்காட் டைய ரருள்பெறு பத்திர கிரிப்பேர், அடிகள்சீர்க் காதை செந்தமிழ்த் தொ டையி னுற்றினே னறிவிலாச் சிறியேன், கொடுத்திற் பிழை களிருப்பினுங் களைந்து நிறைந்தநன் னீர்மையிற் கொள்வர், வடிதமிழுணர்ந்த புலமையோர் சிறுரின்மழலை கேட்டுவக்கு மாறெனவே. (10)

## பாயிரம் முற்றிற்று.

## யாத்திரைச்சருக்கம்

### நாட்டுச்சிறப்பு.

### தரவுக்கொச்சகம்.

சீர்மலியும் வயலெங்கு நென்மலியுந் தடமெங்கும்
கார்மலியும் பொழிலெங்குங் கவிமலியு 1மவையெங்குந்
தேர்மலியு மறுகெங்குந் திருமலியு மனையெங்கும்
பேர்மலியுந் துருவகாட் டணியெவரே பேசுவார் (1)

1. அவை-கற்றோர்சபை.

## நகரச்சிறப்பு.

வானுலவுந் 1 துகிற்கொடிகண் மண்ணுலவு 2 நகிற்கொடிகள்
கானுலவும் 3 வண்டினங்கள் கரத்துலவும் வண்டினங்கள்
மீனுலவுந் 4 தாமரைகள் வெளியுலவுந் தாமரைகள்
மானுலவும் வைவேர்மகி ழுஞ்சேனைமாகாளம். (2)

இன்னவள நகரிலற மெண்ணான்கு முருப்பெற்ற
தென்னவிருந் தரசுபுரி யிறைபத்திர கிரியென்பான்,
பன்னகப்பூணணிபரமன்பதம்பரசு வான்பகைகொண்
மன்னர்முடியிடறுநக மால்யானைப் படையுடையான் (3)

5 திறைதருமா நிலமன்னர்க் கரியனாயானுந் தங்
குறையிரப்போர்தமக்கெளியன் கோடிலாக் குணக்கடலான்
6 உறைமுகில்பைங்கூழ்வளர்த்தலெனப்பவுளகுடிபைபலாம்
7 முறை 8 புரிந்து வளர்த்திடுவான் முதுலகு புரக்குநாள் (4)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னி மாநதிப் புனல்பரந் தளவில
பொருவி லாவளந் தருதலா லெவைக்குஞ்
சென்னி நாடெனப் பெயர்பெறுநாட்டிற்
றிருவ மல்கிய பூம்புகார் நகரிற்
பன்ன காபரணன்வரத் தனைப்
பதியின் வரநீந்நிக் கொண்டிரு மகவாய்
மன்னுவைசியர்மரபினன்னான
மலிபு கழ்ச்சிவ நேசர்பாலுதித்தார். (5)

---

1. துகிற்கொடிகள் - வஸ்திரத்துவசங்கள்.
2. நகிற்கொடிகள் - தனங்களையுடையபெண்கள்.
3. வண்டினங்கள் - வளையல்கள். (கங்கள்
4. தாமரைகள் - தாமரைபோன்றமுகங்கள், தாவுகின்றபயிரு
5. திறை - அரசிறை.
6. உறை - மழைத்திவலை.
7. முறை - ஒழுங்கு.
8. புரிதல் - விரும்புதல்.

கசியு மன்பினற் றந்தையார் திருவெண்
காட ரென்றுநன் னாமமே சூட்டி
யுசித மாவளர்ப் புழிவய தோரைந்
தூற்ற போதத்த னுயர்பத மடைய
வசையி லன்னைகற் பிக்கநற் கல்வி
மாட்சி யுற்றிடை மருதர்தம் மருளால்
இசையுஞ் செல்வமெ லாம்விடுத் தீச
னொழும்ப தியெலாந் தொழும்பரி செழுந்தார். (6)

பத்தி யான்மிகு வாருணை தேவ
பாண்டி யன்றனைப் பற்றிய பிரம
கத்தி நீங்கிய விடைமரு தாரேர்
கவின்ற ருங்குடந் தைப்பதி முதலா
வெத்த லங்களும் பணிந்துபாண் டியற்போ
யிலங்கு கூடன்முன் னாந்தலம் பரவிச்
சித்த ருக்கிட மாமலை நாட்டிற்
றிருவஞ் சைக்கள மாந்தலம் பணிந்தார். (7)

பின்னர்க் கொங்குநா டடைந்துயர் காஞ்சிப்
பேரைப் பட்டிநா யகனடி பணிந்து
மன்னு காதலின் மதுரமுன் னுண்ட
மதலை யைக்கொடுத் தருளவி னாசி
முன்ன தாப்பல தலங்களைப் பரவி
முகுந்த னம்புயன் முதற்பல தேவர்
நன்னர்ப் போற்றுறுஞ் சீரிய வருண
சலஞ் சென்றனர் பூம்புகார் நாதர். (8)

ஆங்கி லங்கைய ரிறைவனற் பூசை
யாற்று கோகணத் தமர்ந்ததெள் ளமுதை
யோங்கு காதலிற் பணிந்தணித் தாக
வுளவுஞ் சேனைமா காளமாப் பதியிற்
றேய்ந்துபூரணர் திருவடி வணங்கிச்
சென்று [1]மாடொளிரு [2]புறங்காட்டின்
பாங்கி னோங்கான் [3]தளியினில் யோகம்
பயின் றிருந்தனர் பட்டினத் தடிகள். (9)

யாத்திரைச்சருக்கம்

முற்றிற்று.

---

1. மாடு-பக்கம்.
2. புறம்-பக்கம்.
3. தனி-கோவில்.

## ஞானோபதேசச்சருக்கம்.

### கலிநிலைத்துறை.

அன்னபோதத்தக்கரையாள்பத்திரகிரிப்பேர்
மன்னர்கோ1னிருவினை2யொப்பும3லபரிபாகம்
பன்னு4சத்திநிபாதமோ5டுத்தமகுணங்கள்
துன்னித்6தீவிர7பக்குவமுறுதலைத்8துருவி. (1)

கங்கைவாண்மதி9மிலைச்சியகண்ணுதற்பெருமான்
அங்கவ்வேந்தனுக்கருள்செய்வானெண்ணியவதனாற்
பொங்குசோரர்கள்பற்பலர்குழீஇயினர்புகழ்10மா
தங்கநாயகன்11திருமுன்னர்வந்தடிதாழ்ந்தார். (2)

நன்றுவேண்டினர்மன்னவனரண்மனைநாடிச்
சென்றுமாநிதிக்குவைகளுஞ்செம்மணிக்கலனும்
துன்றுதம்விருப்பகலுமாவாரியே12துனைவிற்
குன்றுபோற்சுமைசெய்தெடுத்தகன்றனர்கொடியோர் (3)

கள்ளர்செல்வுழிக்கருதியபொருளருண்மூத்த
பிள்ளையார்புயத்தணிக்தொருமணிக்கலன்பெயர்ந்தார்
நள்ளிருட்பொழுதாகையானன்றுயோகிருந்த
வள்ளல்பட்டினத்தையர்தோள்வீழ்ந்ததம்மணிப்பூண்.

---

1. இருவினை-நல்வினை, தீவினை.
2. ஒப்பு-சமன்.
3. மலபரிபாகம்-பாசம் நீங்கலுற்றபக்குவம்.
4. சத்திநிபாதம்-நால் வகைப்படும். அவை, மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம், என்பன. இவற்றில மந்ததரம்கடவுளொருவர் உண்டென்றறிதல், மந்தம், அக்கடவுளை அடைவதற்கு மார்க்கம் எப்படியென்றாராய்கை. தீவிரம் அப்படி ஆராய்ந்தறிந்தபதியை யடைவதற்குப் பிரபஞ்சப்பற்றற்று நிற்றல். தீவிரதாம், பிரபஞ்சத்தை முற்றுந்துறந்து ஆசாரியனேபொருளெனவழிபடுதல்
5. உத்தமகுணங்கள்-நன்மையானகுணங்கள்.
6. தீவிரம்-விரைவு
7. பக்குவம்-பருவம்.
8. துருவல்-ஆராய்தல்.
9. மிலைச்சல்-அணிதல்
10. மாதங்கநாயகன்-விநாயகர்.
11. திருமுன்-சந்நிதானம்.
12. துனைவு-விரைவு.

இரவுநீங்குமுன்னிறைவன்சேவகர்1பரிசனர்கள்
காவுசோரரையெங்கணுந்துருவினர்காணார்
பரவுகாற்சுவட்டின்வழிக்காட்டிடைப்படர்ந்து
மருவுபிள்ளையாராலயத்திடைவதிந்தனராஅல். (5)

வெய்யவன்கருங்கடன்முகட்டெழுதலும்வெண்காட்
டையர்தோண்மிசையாரத்தைச்சேவகரறிந்தார்
வெய்யசோரருட்சோரன்மற்றிவனெனவெகுண்டு
கையவைதடித்2துரப்பினர்கண்டவர்கலங்க (6)

பொருவிலையர்தா3நிட்டையினீங்கித்தம்புயத்தின்
மருவுமாரத்தின் வருகையு4மொறுத்திடுமன்னன்
பரவுசேவகர் செய்கையுமறிந்திலர்பரமன்
திருவடித்துணை சிந்தித்துச் சிவவெனவிருந்தார். (7)

காவலாளரிற்சிலரிவர்கள் வரேயல்லர்
யாவரோபெரியோரென வறைந்தனர்சில்லோர்
கோவினுக்குரைத்துக்தெளிந்தன்றியாங்5குமைத்தல்
பாவமென்றுபோய்ப்6பார்த்திபன்முனமிவைபகர்வார் (8)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருமறையின்முறைவழுவாதகிலமெலாம்புரந்தருளெம்7மடி
கள்கேண்மோ, தருமலிகானிடையிந்தமணிக்கலனோடொ
ருசோரன்றன்னைக்கண்டே, மருவிவனைத்தக்கபடித்தண்டி
யாதொழிவீரேன்மன்னுமுங்கள், 8திருவமெலாங்கொள்ளை
யாய்ப்போகுமென9வற்புறுத்திச்செப்பினரே. (9)

---

1. பரிசனர்-ஏவல்செய்வோர்.
2. உரப்பல்-அதட்டல்.
3. நிட்டை-யோகசாதகம்.
4. ஒறுத்தல்-தண்டித்தல்.
5. குமைத்தல்-அழித்தல்.
6. பார்த்திபன்-அரசன்,
7. அடிகள்-தலைவர்.
8. திருவம்-செல்வம்.
9. வற்புறுத்தல்-உறுதிப்படுத்தல்.

அவ்வுரைகேட்டலும்வேந்தனவருரைத்தமொழிக்கிசைந்தக்கள்வன்றன்னை, யெவ்வமுறக்கழுமரத்தினேற்றுகவென்றிடக்கடிதினிணையிலாத, செவ்வியரைக்கொண்டடைந்தக்கழுமரத்தினருகேசேர்ப்பித்தோர்கள், டுவ்வினையரசெனக்குறியென்செய லென்றிப் பாடலியம்பினரே. (10)

இயம்புதலுங் கழுமரந்தீப் பற்றியெரிந்தது கண்டோர் 1இமைப்பிலோடி, வயம்பரவு மன்றுனிருக்கூறுதலுமெய்ந்தியுளா 2மாழ்கி மன்னோர், பயம்பரவ வோடிவந்து கழுமரத்தினருகினுறு பரமனாரை, நயம்பரவுங்கொண்டாடித் தமைக்கண்டு பிரபஞ்சந்துறந்தாரே. (11)

அவ்வண்ணங்கண்டமறக்கவராசனுமாய்வுற்றன்பினடிகள் பாதர், செவ்வண்ணமலர்ப்பலகாற் பணிந்துகோடிநிகரிலாயேனறேனவீரதம், மெய்வண்ணமறியாது செய்தபிழைபொறுத்தருளென்றுமொழு, கைவண்ண மலர்குவியப்பிரார்த்தித்து நின்றானைக் 3கண்ணின்னோக்கி. (12)

4சிவஞானமயமாய சிந்தையாருமாசிரியர் மனைக்கேதிவித்துப்ப, நமக்கருள்செய்தருமாறுள்ளறிவிக்க வாறுகூறத், தவமாருமையர் தமைப்புடைதென்தெறித் தருபின்னுறுதிசேராப், பவமாருந்திருவருச்சக்கரமெனனுந திருப் பாடல் பகர்ந்தானே. (13)

அப்பொழுதேயரசன்மகாகதேவிநலகவியகாரயனைத் துறந்து, யொப்பரியவிறைவேடமொழிந்துறவையமெனவுன்னுதையர், செப்பரியதிருவடியிலாழ்ந்தவிடபிபோல்வீழ்ந்து சிறியேன்செய்த, விபரிதப்பிழையைப்பொறுத்தெளியேனுய்வருள்கவென்று குறைநிரந்தரானே. (14)

---

1. இமைப்பு-இமைப்பொழுது. 2. மாழ்கி-மயங்கி.
3. கண்ணின்னோக்கி-நயனதீட்சைசெய்து
4. சிவஞானம்-சிவத்தையறியும் அறிவு.
5. தத்துவசுத்திசெய்தல்-தத்துவங்களின் முறைமையை அறிவித்தல்

கண்டையரோங்காரமாய் நின்றவெனுங்கனியைக்கனிந் தபாடித், தொண்டறும்படித் 1தியானதீக்கையினாற்சிவஞா னத்துன்னுமாசெய், தண்டர்நாயகரமருமிடைமருதூர்க்கே குகவென்றருளிச்செய்து, பண்டைநான்மறைபரவுமறைக்கா டுமுதற்றலங்கள் பணிந்து பாடி. (15)

அடைவார்தம்பிறவி வினையகற்று திருவிடைமருதூர டைந்துவெள்ளை, விடையார்தம்பதம்பரவிக்கிழ்ச்சிகரவாயி லின்வீற்றிருந்தாரையர், கொடையார்கைப்பத்திரகிரிக்கோ முனிபுங்குருவருளின்படியேபிச்சை, 2மடையேற்றுண்டரிய சிவயோக3சாதனையைவிடாவாய்மைபூண்டு. (16)

தலங்கடோறும்போய்ப்பரமன்றண்மலர்ப் பூந்தாள் பர வுந்தன்மைபூண்டு, நலங்குலவுசெல்வமெலாங் 4கான்றசோ றெனவிடுத்து நகரினீங்கி, யிலங்கையர்கோன்பணிபுரிந்த கோகர்ணத்திருப்பதியினைப்பியாங்கண், வலங்கதிர்வெம்ம ழுவேந்து மாபலலிங்கேசரடி வணங்கிமீண்டார். (17)

கொங்குமலர்ச் சோலைதாவுலவுதிருக்கொங்கு நாடெய்தி யாங்குப், பங்கயனுநதிருமாலும்பட்டிமுனிகோமுனியாய்ப் பரவுகாஞ்சித். துங்கநதிவாயப்பேரைப்பட்டிநாயகர் பாதந் தொழுது போற்றி, மங்கைமரகதக்கொடியை வணங்கியா சம்பலமுமகிழ்ந்து தாழ்ந்தார். (18)

ஆண்டகன்றுமுதலையொரு மதலைதருமவிநாசியரனைப் போற்றி, யிண்டுபுகழ்க்கொடுமுடியீசனைப்பணித்தானிலைய ரனையினிது தாழ்ந்து, பாண்டியிற்போயிருங்கூடற்பதியிலு றைசொக்கேசர்பாதம்போற்றிக், காண்டருசீரருட்கடலங்க யற் கண்ணியிருபதமுங்கனிந்து தாழ்ந்தார். (19)

---

1. தியானதீக்கை-மனத்தால் நினைந்து செய்யுந்திட்சை.
2. மடை=சோறு.
3. சாதனை=பழக்கம்.
4. கான்றசோறு=கக்கியஅன்னம்.

மற்றுமுள பலதலங்கள் போயீசனடிபணிந்து வளவர் நாட்டின், உற்றானைக்காவிலுறைசம்புநாயகனடியையுவந்து போற்றி, வற்றாத புனற்கங்கை வரம்பெறுமாக் குடந்தை நகர் மன்னியாங்கண், முற்றாவெண் டிங்களணியமுதகும்ப நாயகர்தாள் முன்னிப் போற்றி. (20)

மறைவனம்புக்கிறைவனடி வணங்கி முசுகுந்த வேந்தின் மன்னன்வானத், திசைபெருநகர்த்தியாகேசர் தமைத்தரிசித் தணிபூசையியற்றுஞ்சொல்சீர்க் குறையிலிருமாருதற்கருளிப் புற்றிடங்கொண்டார்கோலம் போ [illegible] றையாயர் திருத் தொண்டத்தொகைபுகன் [illegible] விளைத்துப்போற்றி

ஆரணமாக மறியத்தகாதநிருமை தில்லையடைந்து, மன்னூர், தோரணவீதிகள் சூழ்ந்துள்புகுந்தைந்துதொழில் வியப்புலியும்பாம்பும், பூரணியம்பிகையுமுளம்பூரிப்பமறைப ரவப்பொதுவிலாடுங், காரணனைக்கனகசபாபதியையிருகண் களிப்பக்கண்டுதாழ்ந்தார். (22)

சிவகங்கைபடிந்தாங்குத்தீர்ந்தடைவார்பிறவிவினைதீர்க்குஞ்செல்வ, நவகங்கைமுடிமருதவாணருறை யிடைமருதூர் நண்ணிஞானத், தவர்வெண்காட்டையரைக்கண்டடைந்தபசு வெனக்கண்டு சரண்மேல்வீழ்ந்து, புவனிமிசைப்படிந்து கிடந்தார் பத்திரகிரியோக புனிதரம்மா. (23)

இதுகண்டதிருவெண்காட்டையர் கரத்தாலவரையெடுத்துநோக்கி, 2விதுகண்டமேற்சிகரவாயிலிற் போயிருக்கவெனவிடைபெற்றேகி, மதுகண்டசுரும்பென்னமருதடியின்முளைத்தெழுந்தவள்ளல்பாத, மதுகண்டுபரவசமுற்றானந்தக்கடன்மூழ்கிப்பாவலானார். (24)

## ஷை வேறு

மின்னன்னாரை வெறுத்தவர்க்கே வீடுதருவேமெனமறைநூல், சொன்னநீவானதிமானைச்சுமந்தாய்மலைமான்றனையாகம், மன்னவைத்தாய் வரகுணதேவன்றன் மனையையுட்கொண்டாய், என்னையென்பார்க் கென்புகல்வாயிடைமாமருதூரெம்மானே. (25)

---

1. காவலன்=சுந்தரமூர்த்திகள்.
2. விது=சந்திரன்.

மீனநோக்கின் மடவாரை வேட்டஞான்றோர் பூதமுண,
வானவன்னக்குழியும்வையையாறுமமைத்துத்தந்தருணீ, ,
தேனக்கலர்தாருகவனத்துத்தெரிவையார்பாற்பலியேற்றாய்
ஈனதொழிலென்றிசைப்பார்க்கென்னிசைப்பாய்மருதூரெ
ம்மானே. (26)

பானன்மேனிப்பண்ணவனேமுதலோர்க்கழிவிலுயர்பதமும்
ஆனபணியும்பொற்றுகிலுமளித்துமருதினமர்ந்தாய்நீ,யானை
தம்தோலும்புலித்தோலும்போர்த்துமுடித்துமாவென்பும்,எ
னத்தெவிறும்பூண்டனையென்பார்க்கென்புகல்வாயெம்மானே

டை வேறு

மருவார்தம்புரம்பொடித்தமருதீசரடியிங்ஙன் வணங்கிமீண்டு
குருவாசகப்படிவின்குலவுகொடியார்மேலைக் கோபுரத்தின்
திருவாசலிருந்தைபங்கினமேற்றுரியர்க்கருத்திச்சேடமுண்டு
பெருயோகம்பயின்றுலகம்பேயென்னப் பத்திரகிரிப்பெரியோ
ருற்றார். (28)

ஞானோபதேசச்சருக்கம்முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 47.

---

## திருவவதாரச்சருக்கம்,

எழுசீரடியாசிரியவிருத்தம்.

இன்னவாரிகமுங்காலையோர்நாளினிறைகுருபரிகலசேடந்,
தன்னையுண்பாக்குச்செல்வுழிக்காப்போர்தாமிலாவொருசிறு
பெண்ணாய், மனனிய பசியால் வருந்துதன் னிலையைவால்
குழைத்தெளிமுகத்துணர்த்தத், தானுமக்குறிகண்டிரங்கி
ப்பிரசாதச்சோற்றினிற்சிறிததற்கிட்டார். (1)

இட்டருள்குரவன்பரிகலசேடமினிதருந்தியவிளஞுமலி
மட்டிலாச்சீர்த்திப் பத்திரகிரியெம்மாதவன்மேனியைக்காத்
துக், கிட்டியங்கிருந்தப்பெருமானுங்கிளருமுச்சிட்டமிட்டு
வந்தார், பெட்டைநாய்க் [1]குருளையதன்வாலாறுயாதெனிற்
பேசுதுங்கேண்மோ. (2)

---

1. குருளை = குட்டி.

கழிந்தசென்மத்தினங்கதேசத்திற்கவின்மிகுகணிகைமா தொருத்தி, யிழிந்தசெய்கையளாயாடவர்பலரையெவ்வகை யாலும்வஞ்சித்து, விழைந்திரும் பொருளையீட்டியூன்கள் ளும்வெறுப்பவுண் டுயிர்க்கொலை யாதி, தழைந்திடக்காலம் போக்கினளிருக்குஞ்சமயத்தோர்தினத்துநண்பகலில். (3)

கனிசிவஞானியாயதன்குரவன்கட்டளைப்படிபலியேற்பத், தனிவருசிடன்கையில்விடபுருடர்தம்மொடுமருந்திபவெச்சில் இனியபிற்றுணவையவள்பரிகாசத்திடவதையேற்றுத்தன்கு ருவை, மனமகிழ்வினைந்துநிவேதித்துண்டிச்சைவழியினிற் போயினன்மாதோ. (4)

பின்னரவ்வேசிமுதியளாயிறந்துபெட்டைநாய்ப்பிறவியை யடைந்தாள், அன்னளாயினுமாயோகசாதகனினரும்பசிந ணித்தபுண்ணியத்தால், [1]இன்னநாட்பத்திரகிரிச்சிவயோகி யெச்சிலுண்பேறடைந்தவர்தம், மன்னுடற்காவல்பூண்டியார் முத்திமருவுதற்குரியவளானாள். (5)

## கலிவிருத்தம்.

இப்படிச்சிலபகலேகமற்றவட்
கெய்ப்பினன்முத்தியின்பெய்துகாலமோர்
தொப்பிலாவிடைமருதூரிச்சையால்
தப்பிலாவருட்சித்தர்வேடஞ்சார்ந்தனர். (6)

திருவெண்காட்டடிகண்முன்சென்றைபாவெனை
மருவியபசிப்பிணிமாற்றவேண்டுமென்
றுரைசெயவடிகளுநகைத்தோர்கோவணம்
பெரியவன்பொறையெனாவிருக்கும்[2]பெற்றியேன். (7)

அடிகளும்பெரும்பிணியாற்றவல்லனே
கொடிநிகழ்மேலைக்கோபுரத்துவாயிலோர்
மடிவிலோர்குடும்பிமுன்மருவினும்பசி
நொடியினிற்றீர்ப்பன்போமெனநுவன்றனர். (8)

---

1. இன்னநாள்=இத்தன்மையநாள்.
2. பெற்றி=தன்மை.

ஐயர்சேர்ப்படியவனேயென்புடை
மெய்யர்பத்திரகிரிவேந்தைக்கண்ணுறீஇ
செய்யவிற்கோபுரவாயிற்சேர்ந்துறை
யையர்பாலென்பசியகற்றென்றோதினேன். (9)

உரைத்தகோவணம்போறையாகவுள்ளவேற்
கடுத்தநும்பசிப்பிணியகற்றல்கூடுமோ
தொடுத்தமேற்கோபுரவாயிலுன்னிய
மடுத்தசம்சாரிபான்மருவின்மாற்றுவான். (10)

என்னவின்றிடமெய்தினேன்பசி
தனையொழிதீராதிருந்தவிர்க்கவல்லிரோ
பன்னுவீரெனச்சித்தர்பகரக்கேட்டுமற்
றன்னசொற்பொருளினையறிந்துமாதவர். (11)

பிச்சைபுக்குண்ணுமிவ்வோடும்பிச்சைச்சோற்
றெச்சிலுமன்றுமவியுமெனைக்குடும்பியா
கிச்சயித்தனவெனவெகுண்டு1கம்பமுற்
றச்சமாயரியன்கருத்திதாகுமேல். (12)

பாத்திரமிதுவும்வேண்டேனெனப்பகர்ந்
2தாத்தன்கையிருந்தவோட்டைச்சுழற்றியே
3நீத்திடவெறியகாய்நெறியிற்றுக்கியம்
மாத்தவோடுடைந்ததங்காயுமாய்ந்ததே. (13)

மன்பவிக்குற்றசீர்மருதவாணரும்
புன்னகையோடவண்கரந்துபோயினர்
பின்னரப்பத்திரகிரியுமெய்ப்பிரான்
தன்னருந்திருவருடன்னைநாடியே. (14)

புரையிலாவுண்மையோகம்பொருந்துறத்
தரையினோர்க்கருட்டிருப்புலம்பறன்றொடும்
4வரையிலாஞானநூன்மகிழ்ந்துபாடியே
கரையிலாயோகத்திற்களித்திருந்தனர். (15)

1. கம்பம்-நடுக்கம்.
2. ஆத்தன்=பெரியோன்.
3. நீந்தல்=நீக்கல்.
4. வரை=அளவு.

## அறுசீரடியாசிரியவிருத்தம்.

அப்பாலந்தவிளைஞமலியண்ணல்பத்திரகிரிப்பெருமான், கைப்பாலடியுண்டிறந்ததனுக்கன்மம்யாவுமறக்கழிந்து, மைப்பாவியபூங்களத்தெம்மான் வரைமாமயிலைப்பிறைபதியாம், ஒப்பியதொன்றுமில்லாமலுயர்மாக் காசிநகராள்வோன், (16)

எண்ணெண்கலையுமினிதுணர்ந்தோனிளையகாமனெனுமெழிலான், மண்ணின்வாழு[1]மன்பதைகள்வருந்தாவண்ணமன்னுயிருங், கண்ணும்போலக்காத்தருள்வோன்கறங்கு[2]மூன்றுமுரசுடையோன், விண்ணினரசனெனவிளங்கும்விசுவருத்திரனெனுநாமன். (17)

சிந்தாமணியோவைந்தருவோதெய்வப்பசுவோவெனுங்கொடையாளன், செந்தாமரையாளமர்மார்பன்றிங்கட்கொழுந்துஞ்செம்பாம்பும், மந்தாகினியும்புனைசடிலவள்ளல்பாதமறவாதான், நந்தாச்செங்கோலுடையானுய்நாடுபுரக்குமந்நாளில். (18)

தனையரில்லார்பெறும் வாழ்வு சாற்றின்மணமின்மலர்போலும், மனைவியில்லாமனைபோலுமதியமில்லாவான்போலும், புனைவில்பாவுஞ்சுவையில்லாச்சோறுமன்பிற்பூசையுநல், அனையின்மகவும்போற்பயனின்றழியுமென்றுமனத்துணைந்தான். (19)

பிள்ளையில்லாப் பெருங்குறையாற் பெரிதும் வருந்திப்பிறைமுடியோன், எள்ளில் பதிகள் பலபுதுக்கிப்பிள்ளையில் விழாக்க[3]ணிபந்தங்கள், தள்ளில்பூசைமுதலாகச்சமைப்பித்தனந்தவமாற்றிக், கள்ளமகன்றெம்பெருமானைக்கனவுமறவாதிருந்தனனால். (20)

---

1. மன்பதை=மனிதர்கூட்டம்.
2. மூன்றுமுரசு=மணமுரசு, கொடைமுரசு, செயமுரசு.
3. நிபந்தம்=பூசைமுதலிய ஏற்பாடுகள்,

பொன்னம்பலத்துநடமாடும்புனிதன்கருணை புரிந்தத
னால், மன்னன்விசுவகுந்தன்றன்மனைவிவயிற்றிலவதரித்துப்
பன்னுதிரைவெண்பாற் கடலிற் பாரும்விசும்பும்பணிந்தேத்
தப், பொன்னன்மாதுபிறந்ததுபோற்பிறந்தாள்புவியோர்
கொண்டாட. (21)

மதியைக்கண்டகடலென்னமங்குல்கண்டமயிலென்ன
நிதியைக்கண்டவறியனெனநீரைக்கண்டகயலென்னப்
பதியைக்கண்டமகவென்னப்பசுவைக்கண்டகன்றென்
னக், 1கதியைக்கண்டவுயிரென்னக்கண்டானரசன்காதலி
யை. (22)

ஆசைக்கடலைப்புகட்டுமகட்கரியருணவல்லியென
வேசிறுமையிட்டுமனத்தினியசெங்கோன்மனுவேந்தன்
தேசத்துலகம்புரந்திடுமென்னெறியின்வளர்ந்துவருநாளவ்
வாசக்குழன்முன்னுணர்வுற்றுமணஞ்செய்பருவம்வாய்ந்தன
ளால். (23)

பொன்னேமணியேசெழுங்கரும்பேபுனமாமயிலேபைங்
கிளியே, மின்னேயமுதேயெனத்தாயர்விரும்பிப்பலகாற்
கொண்டாடத், தன்னேரில்லாச்சங்கரன்பூஞ்சரணமறவாதி
னிதுறையும், அன்னேர்குழலியணிபுகலவரிதாயினும்யாஞ்
சிறிதறைவாம். (24)

எழுசீரடியாசிரியவிருத்தம்,

கூந்தல், நுதல்,

2அறலினைமுனிக்கும்பசியசைவலத்தையறலினுட்புகுத்தி
மாமுகிலை, 3மறலொடுந்தங்கணீர்சொரிந்தலைந்துமலைப்புறத்
தொளிதரப்போக்கி, நிறையிருள்கவர்ந்துகானமும்புழுகு
நீவிநின்றிருண்டபூங்குழலாள், பிறையொருகிலையினுள
தெனிற்பொருவும்பெற்றியந்திருநுதலுடையாள். (25)

1. கதி=மோட்சம்.
2. அறல்=கருமணல், நீர்.
3. மறல்=மயக்கம்.

### புருவம், செவி, கண்.

1கார்முகமிரண்டோரிடத்திருந்தன்னகாட்சிசேர்கரும்புருவத்தாள், சீர்பெறு2குதம்பையணிபெறவணிந்தசெயலினூர்வள்ளையஞ்செவியாள், நீர்பெறுகடல்வண்ணனயனரிக்கரியநீலமற்றிவைகுணந்தழுவி, வார்செவியளவுநீண்டு3கண்ணோட்டமருவியமதரரிக்கண்ணாள். (26)

### நாசி, இதழ், நகை.

மலர்ந்தசெங்கமலமலர்மிசையிரண்டுவண்கருங்குவளைகள் மலர்ந்து, நலந்திகழவற்றினிடைபொருங்குமிழம்பூநண்ணிடிற்பொருவுநாசியினாள், இலங்கு4செங்கிடையோபவளமோமுருக்கோவெனப்புகல்செவ்வியவிதழாள், அலங்குவெண்மணிசெம்பளவள்ளத்திளமுத்தியபோலணியெயிற்றாள். (27)

### கபோலம், சொல், முகம்.

5கஞ்சனமனையகதுப்பினாள்காவிற்கருங்குயில்பைங்கிளிகடிக்கும், அஞ்சொலாளென்றுங்கலைகுறையாமலலையுருதொருபடித்தாகிச், செஞ்சுடர்முன்னரொளிதிறம்பாதுசெறிந்திடுகளங்கமிலாது, விஞ்சொளிமதியமுளதெனிற்பொருவுமெல்லியசரோருகமுகத்தாள். (28)

### கண்டம், தோள், கை, முலை.

கந்தியைப் பசியகமழையிணைவளையைக் கறுத்திகழ்ந்தொளிர்திருக்களத்தாள், நந்துறுபசியவேய்நிகர்தோளாணறியசெங்காந்தளங்கரத்தாள், மந்தரமுதலவரைகளைவெறுத்துமாமைமாமலைவளைவின்மேல், அந்தமொப்பாமென்றறைதாவிழுமாங்கனியொடும்விளங்குபூண்முலையாள். (29)

---

1. கார்முகம்=வில்.
2. குதம்பை=காதணி.
3. கண்ணோட்டம்=தாட்சண்ணியம்.
4. செங்கிடை=சிவப்புகெட்டி.
5. கஞ்சனம்=கண்ணாடி.

### வயிறு, உந்தி, உரோமபந்தி.

குன்றெடுத்தாயர் குலத்தினை[1]சுரபிக்குழுவினைப்புரந்த ருணேமி, மன்றலந்துளபமாபவன்றுயிலும்வடதருவிலைநிகர் வயிற்றாள், துன்றுநீர்த்தரங்கச்சுழியினைப்பொருவுதூயநல் லுந்தியாண்முகத்தை, யொளிறியமதியென்றுணச்செலுங் கரியவுரகனேருரோமபந்தியினாள். (30)

### இடை, அல்குல்.

அணிநமக் கிறுமாக் கிழையிடை புகாமலறப்பணைத் தொளிர்முலைசுமந்து, கணிகையருளமுங்கற்றிலாரறிவுங் கடவுளரடியவர்க்கீயார், தணிவிலாப்பொருளும்போலமன் மெலிந்துதளர்ந்தொசிநுண்ணியவிடையாள், [2]பணிபணத்தி னை வென்றனங்கவேளிருகைபடித்தெனப் பரந்த வல்குலி னாள் (31)

### தொடை, முழந்தாள், கணைக்கால், புறவடி.

மாரவேளரசின்னவைக்கு[3]மத்தாணிவாயினாட்டியவரம் பை, நேரெனக்கரிக்கைநிகரெனப்புலவர்நிகழ்த்துறுமென் கவானுடையாள், சீரியவெண்டிகிரிவாராப்பொருவுசெழுமு ழந்தாள்கணைக்காலாள், வாரியவாமைமுதுகெனச்சீர்த்தி மருவியபுறவடியுடையாள் (32)

### பாதம், நடை.

நறியசெங்கமலநடுங்கியுண்ணெகிழ்ந்துகன்னுகண்ணீர் சொரிந்தலர்ந்து, செறிவனம்புகுதச்செய்துசெம்பஞ்சுநீட் டிமன்விளங்குசீறடியாள், சிறையனநடைகற்பான்பினர்ச் செலீஇக்கால்சேர்த்துடல்வெளுத்துநீர்ச்சலசத், திறைகொ ளீஇத்தவஞ்செய்திருந்திடப் பணித்தவேர் புனையிளம்பிடிந டையாள் (33)

### திருவவதாரச்சருக்கம் முற்றிற்று.

ஆக, திருவிருத்தம் 80.

---

1. சுரபிக்குழு=பசுக்கூட்டம்.
2. பணிபணம்=பாம்பின்படம்.
3. அத்தாணி=அரசன் கொலுவிருக்கை மண்டபம்.

## திருவிடைமருதூர்ச்சருக்கம்,

### அறுசீரடியாசிரியவிருத்தம்.

இத்தருவனப்புவாய்ந்தவேந்திழைஞானவல்லி
யத்தனும்விசுவகுத்தனவன்மணப்பருவநோக்கி
யுத்தமகனாவற்றேடியுருமையின்வருந்தியோர்நாள்
புத்தமுதனையாள்வைகும்புனையெழிற்கோயில்புக்கான் (1)

புக்கதன்றுணைபாதப்போதின்வீழ்ந்திறைஞ்சமைந்த
மைக்கருங்கண்ணாரிதன்னைமனமுவந்தாசிகூறிப்
பக்கமதிருந்தவேதபாரகர்தம்மைநோக்கி
யிக்கொடிக்கேற்ப1காந்தனில்லையென்செய்கோவென்றான் (2

என்றனன்பெரிதுமாழ்கியிருகணீர்சொரிந்துதுன்பம்
ஒன்றியவளத்தறப்புலர்க்கதன்றுணைபாத
மன்றலம்மலரிற்றாழ்ந்துமருவியதவத்தினீன்ற
வென்றணிதந்தாய்கேண்மோவெனவிளையியம்பலுற்றாள் (3

நாடு.

அருமறைமுறையின்ஞாலத்தாருயிர்தம்மைக்காத்து
விரிதிரைக்கங்கைவேணிவிமலனதருளாற்பெற்ற
வொருமகன்றன்மேற்றிண்டேரூர்ந்தசீரநபாயன்றன்
மரபினோர்செங்கோலோச்சும்வளம்புனைசென்னிநாடு (4)

மதிதவழ்குடுமிச்சையவரையினிற்றோன்றியாருந்
துதிசெயவருவிக்காவிற்2றுணைவினினடந்துசார்ந்தும்
மதகரிமருப்பும்பொன்னுமணிகளும்வாரிப்பொன்னி
நதிதிருமருங்குந்துள்ளிநலமொடுமேவிற்றன்றே (5)

முல்லையினமுதமார்ந்துமுயல்சிறுமான்கள்வல்லிக்
கொல்லையிற்கொன்றைநீயாகுருந்தினைவசாய்த்துக்காஞ்சி
நல்லதண்பவானியாம்பிரநதிகளோ3டாடியாண்டும்
ஒல்லைநீர்சிப்பியின்பின்றொலிகடன்மணந்ததன்றே (6)

---

1. காந்தன்=கணவன்.
2. துணைவு=விரைவு.
3. ஆடி=விளையாடி.

வயலெல்லாஞ்செந்நெல்கன்னல்வாழைமாதெங்குபூகம்
அயலெல்லாநாகந்தங்காஞ்சிபருச்சுனமெருமைநீர்நாய்
கயலுறுந்தடத்துநாரைவாரணங்கழுநீர்கஞ்சஞ்
செயலுறுமுழவரோடுமுழத்தியர்திரட்சியெங்கும் (7)

## திணைமயக்கம்.

மலைக்களிறுதனைநீக்கியிருட்களிறுகொண்டனன்மாம
தனென்றன்றேன், சிலைக்கரும்பைமருதினிடைச்சென்றெ
சித்துத்தின் பழக்கிச்சிலைக்கட்சேரும், குலைக்கதலிமருதெ
ருமைதமதுனைவைத்தின்பதெனக்கொதித்துக்குன்றத், த
லைக்கருமென்பினைப்புனத்தைதலிகித்துழக்கித்தின்றுவயல்சா
ருமன்றே (8)

இதனுல் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் மயக்கங்கூறியவாறு.

வானுறுமுன்முருக்கெழிற்செம்மலர்பூத்துக்கனிகிளைத்துவ
யங்குதோற்றம், மாறார்செங்கரத்தெழ்மானவன்னிமலை
யாய்நிற்கும்வடிவுகாட்டும், கூவிளமென்கதன்கீழ்ப்புறகுழ்த
லரணடிகாண்மாற்கோலங்காட்டும், மேனுறைபுத்தலயன்
முடிகாண்பானெழுமன்னமேவல்காட்டும் (9)

இதனுல் முல்லைக்கும் குறிஞ்சிக்கும் மருதத்துக்கும்
மயக்கங்கூறியவாறு.

மறையவர்செய்வேள்வியெழு புகையைமுகிலென மலைக்
கண்மயில்களாடிக், துறைமெழுவண்கருப்பஞ்சுரும்பி
னங்கள்செவ்வழிப்பண்டொடுத்துப்பாடும், நிறைகழனியி
டைக்கமலர்தனத்திருத்துவாலெனனேர்ந்தேற்கும், நறை
கமழ்பூங்கொன்றைகொடைவேந்தனெனப்பொன்சொரியுநல
முமுண்டால் (10)

இதனுல் மருதத்துக்கும் குறிஞ்சிக்கும் நெய்தற்கும்
முல்லைக்கும் மயக்கங்கூறியவாறு.

செய்யிடைநென்னுறுகடுங்கடைசியர்தங்குரவையிசைச்
செவியினேர்ந்து, சையமிசையுலவுபசுந்தோகையெலாங்கண்
வளருந்தளவலூரல், நையுமிடையாய்ச்சியர்மங்கலவள்ளையி
சைகேட்டுகளினச்சேக்கை, வையவிளங்களியனமகனெய்
தற்கழிதுயிலுமணியுமாய்வே (11)

லையடிகள் நூல்

## இதனால் மருதத்துக்கும் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் நெய்தற்கும் மயக்கங்கூறியவாறு.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நகர்.

உள்ளுவார்பிறவிநீக்கியுயர்பதங்கொடுக்கவல்ல, வள்ள
லார்மருதவாணர்மருவியபதியதாமால், ஒள்ளியபுலவர்கற்
பித்துரைபொருட்குவமைசான்ற, தெள்ளியபெரியர்மேவுந்
திருவிடைமருதூரம்மா (12)

அகழ்.

மலர்தலையுலகின்மன்னும்வளப்பெலாமறிந்தாமீண்டு, ந
லனுறுநாகர்லோகவளப்புநன்றுணர்துமென்றே, வலனொடு
ங்கிடங்கர்செல்லும்வழிமணியிமைப்பவைகும், பலதலைய
னந்தற்காணாஉப்பயந்தவணின்றதன்றே. (13)

மதில்.

விண்ணினல்லுலகந்தன்மேல்வீழுமென்றுளநடுங்கி
மண்ணிலிவ்வுலகந் தோளான் மற்றதைச்சுமத் தன்மானக்
கண்ணினல்லறிவுக் கெட்டாக் காத்திர முடைத்தாய்க் கற்
றோர், எண்ணினுமுயர்ச்சிவாய்ந்தவிஞ்சிநாற்புறமுமோங்
கும். (14)

கொடிகள்.

அரியநான்மறைகடேறுவரனடைந்தோர்க்குமுத்தி, த
ருவமென்றிலிங்கரூபஞ்சார்ந்திவணிருந்தானென்று, திரு
விடைமருதூரென்னுஞ்செழும்பதிகையான்மாந்தர், ஒருக
வென்றழைத்தன்மானமணிநீர்துகிற்கொடிகண்மன்னும்.15)

யானைகள்.

மூவகைத்தேவரேனோர்முன்னுவமுற்றவர்க்குந்
தேவனைங்கரனேயென்னுஞ்சிரமதுறுப்புண்மேன்மை
மேவியதலையைப்பெற்றவிதத்தினாலன்றோவென்று
பாவடிப்பனைக்கைவேழம்பற்பலவுலவுமெங்கும். (16)

## இதன் பொழிப்புரை

மூன்றுவிதமாகிய (அயன், அரி, அரன் என்னும்) தேவர்களும் (இந்திராதி தேவாசுரமானிடர்கள் முதலிய) மற்றையோரும், நினைக்கப்பட்ட (படைத்தல் முதலிய செயல்களைவற்றையும்) முடிபுமாறு செய்கின்ற தேவனாவான் ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுள் ஒருவரே என்று (புராணங்கள் கூறும்) சிறப்பானது, எங்களுடைய அவயவங்களுள் மேன்மைபொருந்திய தலையாகிய உத்தம உறுப்பைப்பெற்ற அத்தன்மையாலன்றோ என்று சொல்லிக்கொண்டு பரவியகாலகளையும், பனைபோன்ற துதிக்கையும் உடைய யானைகள் அநேகம் எவ்விடங்களிலும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும், (என்றவாறு) மூன்றுவ=பலவின்பால் வினையாலணையும் பெயர். ஏகாரம்-பிரிநிலை. தேற்றம் எனினும் ஒக்கும். இது, உயர்வுநவிற்சியணி.

### குதிரைகள்.

ஓட்டுவோன் பங்கனூர் போமேனெயிர்பலில்வெய்யோன் செல்லும், பாட்டையந்தரமோ ராழிபடைத்த தேரீர்த்தல்சூழ்தல், கோட்டுகல்லிவற்று லெங்கள்குலக் கொவ்வாவென்றேழ் டாவைக், காட்டிமன்னகல்போல் வெண்பற்காட்டுமொப்பத் தியெங்கும். (17)

(இ=ரை)

நடத்துபவன் முடவனாகிய அருணன், நடத்துவிப்பவன் பல் இல்லாத வெய்யவனாகிய சூரியன், போகும்வழியோ ஆகாசம் இழுத்துச் செல்லுதலோ ஒருருளையையுடைய இரதம், சூழ்தலோ சிவபெருமானால் வளைக்கப்பட்டமலை. இப்படிப் பட்ட (இழிந்தசெயல்களால்) எங்களுடைய ஜாதிக்கு ஒப்பாகமாட்டா என்று சொல்லி (சூரியனுடைய) ஏழுபச்சைக் குதிரைகளையும் பலர்க்கும் காட்டி மிகவும் சிரித்தல்போல வெண்மையாகிய பற்களைக்காட்டிக்களைக்கின்ற குதிரைகளையுடைய சாலைகள் எவ்வீடங்களிலும் விளங்குகின்றன.

பங்கன்-குற்றமுள்ளவன் எனவும். வெய்யோன்-கொடியவன் எனவும். அந்தரம்=வெளி எனவும். ஓராழிபடைத்த தேர்=உறுப்புக்கள் நிறைந்ததல்லாத தேர் எனவும். கோட்டுகல்-ஒருவரால் வளைக்கப்பட்டகல் எனவும் வேறு இகழ்ச்சி தோன்றுதலும்கொள்க. இது, பழிப்பணி

### தேரொலிமுதலியன.

தேரொலிகலினப் பாய்மான் சிரிப்பொலி சிறுகட்டுங்கம் மாப், பேரொலிபடைகள்கும்போர்ப்பேரொலியினையிற் பரபரன், வரியொலிமுரசங்களாட் டுளிடையொலியாமொழிமொ ருய், காரொலிதன்னைமாய்த்துக்கடலிரேனுடிக்குமன்றே. (18

### பரத்தையர்.

சிப்பநூல்வலராற்போகச்செயலெலாம்புறத்திற்பீட்டி
யிற்பொலிவார்முறக்கத்துறவரிப்புருதலார்ப்பீக்
கற்பினேம்பாகீரல்லிரெனக்குலக்கனியர்ப்பார்த்துப்
பொற்பொடும்புகலும்வஞ்சப்பொருட்பெண்டிர்தன்மை
சொல்வாம். (19)

கரும்பனமொழிபானீலக்கண்ணிணைமலரான்முல்லை, யரும்பனகைபாற்செம்மையணிதுகிர்ந்தழப்பிறழ்ந்தல், குரும்பைமென்முலையான்மைந்தர்குழுவிராகமீபோம், பெரும்பொருள்வவ்வும்வேசைப்பெண்டிர்வாழ்வீதியோர்பால். (20)

### வேளாளர்வீதி.

அந்தணர்வேள்விமன்னர்கனிமுடிவணிகமார்க்கள்
சுந்தரவாழ்க்கைதேவர்துகளிலாச்சிறப்புபூசை
பந்தியினீத்தோர்யோகப்பயிற்சிமுன்னனைவுமோங்க
வந்தமிழுழவிருக்குமணிவேளாண்குடிகளோர்பால். 21

### வணிகர்வீதி.

உடையணிகொள்ளு மாழிபொன்பொருள் காழ்ப்பசாங்கிக், கடையறுமுதலுக்காய்ந்துக்கடவுளர்பூசையாற்றி, வடதிசைக்கோமான்வெள்கமறையவர்மன்னர்க்கெய்யமின், இடைதெரிந்துதவவல்லவிளங்கோர்கள்வீதியோர்பால் (22)

### மன்னர்வீதி.

பலதலையனந்தன்றூங்கும்பாரொருதேரளிற்றுச்சி
சலவுதம்பகைகளைந்துகிச்சுருதிசொல்லறங்களோம்பி
கலனுறயோத்திராமன்றான்கொள்தண்வெளவிற்
கலையெலாமொருங்குதேர்ந்தகாவலர்வீதியோர்பால்.23

மறையவர்வீதி.

ஓதருகலத்துவித்துப்பின்னிருபிறப்புற்றுமுத்தீத்
தீதுவினைபுரிந்துநான்குதருமமறையோதியைந்தின்
வருபுலமெறிந்திக்காமமுதலறுபகையும்வென்ற
வருமறையந்தணாளரமர்தரும்வீதியோர்பால். (24)

சைவாசிரியர்.

முப்பொருளுணர்ந்துசைவமுதிர்பெருநூல்களாய்ந்து
செப்பிமெய்யடியருய்யத்தீக்கையோர்மூன்றுமாற்றி
பொப்பிலாவீடுபேற்றிற்குரியவராக்கியாளுந்
துப்பிலாக்குரவர்வைகித்துறைமடமோங்குமெங்கும். 25

நீத்தோர்.

ஐம்பொறியடக்கிமெய்ம்மைநாலாய்ந்துநல்லொழுக்கமேவிச்
செம்பொனுமோடுமொப்பச்சிந்தித்துப் பற்றொன்றின்றிப்
பம்பியபிறப்பினீக்கிப் பசுக்களைப் பரிவினோம்பி
யெம்பிரானடியையுள்ளுறுமிருந்தவரிருக்கை யெங்கும். (26)

சைவர்.

தூயவெண்ணீறுபூசித்துயவிலங்கண்மணிகள்பூண்டு
காயமுடனைமொழிமனத்திற்கடவுளைந்தெழுத்துமுன்னிப்
பாயஞானமறையுணர்வர்பைந்தமிழ்மறையுமோதி
நேயமானவைத்தசைவர்நெருக்கமேநெருக்கமெங்கும் (27)

பவந்தெறுநீர்த்தமாடிப்பரமனதடியார்ப்பேணிச்
சிவந்தனைப்பூசித்தென்றுஞ்செம்மையினறங்களோம்பி
நவந்தருஞானநூல்களாய்ந்துநல்லறமேவோர்க்கூவி
யுவந்தமுதருத்தியுண்ணுமுயர்சைவர்தன்மையீதால் (28)

நடனமாதர்.

ஆசில்பண்சதிக்குத்தக்கவமைதியினடிபெயர்த்துக்
காசணிமுலையாரங்கவினடங்காண்பான்முன்னி
யாசையினெய்திவிண்ணோரலைதலினணியாகாச
வாசிகளென்றுநாமமன்னினர்போலுமாதோ. (29)

### கடைவீதி,

நவமணித்திரளுஞ்சோறுநால்வகைப்பொன்னுந்தூசும்
உவமனில்படமென்மையுறுதுகிர்க்குவையுமோங்கித்
தவமலைபோல்விளங்கிச்சதமகனுலகும்வெஃகத்
துவனியாராவணச்சீர்சொல்லுதற்கரியமாதோ. (30)

### சுற்றியதலங்கள்

வாரணமுகத்தோன்வைகும்வலஞ்சுழி வடிவேற்செங்
கை, வாரணக்கொடியோன் வைப்புமறியுறைகரவாயில்
தோரணநெடுநெல்வீதிருந்துடமூங்காய்ப்பாடி, யோரண்மாங்
துறைசிகாழியிறைநடம்புரிபுக்கில்லே. (31)

புகலியர்பெருமான் வேண்டப்பொற்கிழிகொடுத்ததெய்
வத், தகவுறுதுறைசையாரூர்சனமறைபரவுகானம், துக
ளிலரவனத்தவாலங்குடியிவைசூழநாப்பண், நகுமருதிடை
யினுறுகம்பன்மாலிங்கம்வைகும். (32)

இந்திரதீர்த்தம்வாயுதீர்த்தமீசானதீர்த்தம்
சுந்தரக்காருண்யாமிர்தரதீர்த்தநற்சோமதீர்த்தம்
அந்தகதீர்த்தஞ்சேடதீர்த்தமக்கினியின்றீர்த்தம்
பந்தமதகற்றுங்கந்ததீர்த்தம்பாண்டவமாதீர்த்தம். (33)

இவைமுதலாயதீர்த்தமெண்ணிலவிவற்றின்மூழ்கிப்
பவமறப்பேறுபெற்றோர்பராசரன்குகன்விண்வேந்தன்
நவநிதிக்கிழவன்வன்னிநமனொடுநிருதிகங்கை
உவமையில்பாண்டுமைந்தர்முதலியோருரைக்கற்பாற்றோ. 34

இன்னபல்வளத்தின்மிக்கவிடைமருதூரிநாப்பண்
மன்னுபூந்தளியிலெம்மான்மாமலைக்கொடியினோடும்
முன்னுவார்தமக்குழவாமுத்திதந்தருள்வானாலும்
மின்னுமாலிங்கநாமமேவிவீற்றிருக்குமன்றே. (35)

## காவேரி.

குடங்கையினேமிவாரிக்குடித்தகோமுனிவன்செங்கைத்
தடங்கமண்டலத்திழிந்துதண்டலைமலர்கள்வாரி
மடங்கறிதெண்புனலாக்கையான்மாமருதர்தாளருச்சித்தேத்தி
இடங்கொளருந்தனர்ப்பொன்னிபிறங்கிவடபாலேகும். (36)

பற்றலர்பணியுங்கிள்ளிச்சோழபூபார்த்திவன்செய்வித்த
பொற்றனிவிசும்பிற்றோன்றுபுனைநக்ஷத்திரங்கள்
உற்றிடுமிழாவுங்காவேரியுயர்நீராடிப்
பெற்றவூர்மருதர்ப்போற்றப்பெற்றவர்கயிலைசேர்வார்.

பூமியோர்வனசமாகப்பொருந்திதழ்தளிகளாக
வேமமாரதன்பொகுட்டேயிடைமருச்சுனமதாக
நேமமாகினைவார்நெஞ்சினிறைசிவானந்தத்தேனு
மாமலைக்கொடியிதேறுமகாலிங்கப்பெருமான்வைகும்.

வடவரைபோலுமெய்ம்மைவளைத்திகல்கடப்பியொன்று
தடவரைபலவந்தெங்கடாளுவைவேண்டிநிற்குந்
திடமெனவுயர்ந்துநிற்குஞ்சிகரங்கள்பலவுற்றுள்ளும்
குடதிசைச்சிகரவாயெங்குருநாதன்வைகுமாதோ. (38)

அவர்திருநாமம்பத்திரகிரியெனவறைவரக்தத்
தவர்தமக்குரியள்யானத்தத்துவஞானிதம்பால்
குவலயம்புகழுவென்னைக்கொண்டுபோய்விடுவீராயின்
அவயிருத்தின்றியுங்களருங்குலத்தழையுமென்றாள் (39)

பூங்குழன்ஞானவல்லிபுகன்றசொற்பொருளையோர்ந்து
தாங்கருமிறும்பூதெய்தித்தனிரியவிவட்கிஞ்ஞானம்
ஓங்கியபிறப்பினுற்றவிசேடமென்றுவகையெய்திப்
பாங்குறுமூதார்தமமைப்பார்த்திதுபகரலுற்றான்.

காமனதுருவமாளக்காய்ந்ததீக்கண்ணர்வைகும்
மாமருதூரின்மேலைக்கோபுரவாயின் மன்னித்
தோமின்மாஞானிபத்திரகிரியர்தஞ்சுகுணஞ்செய்கை
யாமுறையறிந்துவம்மினென்றனனரசர்கோமான். (40)

மற்றதுகேட்டதூதர்மாமருதூரின்மேவி
நற்றவயோகிபத்திரகிரியர்நற்குணங்கள்யாவும்
முற்றவுநாடிவந்துமுரணினர்பகையைமாய்க்குங்
கொற்றவன்றனதுநெஞ்சங்குளிர்தரக்கூறினரால் (41

கேட்டனனரசனெஞ்சிற்கிளர்ந்தெழுமுவகையூண்ட
மோட்டிளங்கொங்கைமாதைத்தழுமணிச்சிவிகையேற்றி
வாட்டிறற்படைஞரோடுமாமருதூரைநண்ணிக்
கோட்டமின்மறுகிற்போய்க்கோபுரவாயிலுற்றான். (42)

கதிர்செய்வெண்கவிகைநீழற்களிமாமிழிந்தமானப்
பொறியணிச்சிவிகையினும்பொருக்கெனவிழிந்துமண்ணின்
மதிநுதனேரொவல்லிவள்ளல்பத்திரகிரிப்பேர்
முதிர்சிவயோகிபாதமுளரிகைதொழுதுநின்றாள். (43)

பத்திரகிரிமெய்ந்நேரணிபரமயோகத்தினீங்கி
முத்தவெண்முறுவன்மாதினமுழுமதிமுகத்தைநோக்கி
யெத்தலத்தினின்றேயதற்கேதுவென்னென்றுகேட்ப
வத்தகாவடியேனினைதருளினுக்குய்யவென்றாள். (44)

திருவிடைமருதூர்ச்சருக்கம்முற்றிற்று.

ஆக, திருவிருத்தம் 126.

## முத்திச்சருக்கம்

### கலிநிலைத்துறை

என்றவாசகந்தன்செவிபேற்குமுன்னிதயத்
தொன்றுமோதியிலுணர்ந்தனளொண்டொடிபிறப்பு
மன்றலோதிமெல்லினைக்கரம்பற்றினர்கீழ்பால்
துன்றுகோபுரவாயிலிலேகினர்துணைவன். (1

ஆங்குமெய்ப்பரஞானமோருருவடைந்தாங்குப்
பாங்கினவைகுமவெண்காடர்செம்பதமலர்பரவித்
தீங்கிலின்னருபரிகலசேடமுண்டுய்க்கும
ஓங்குவன்பிறப்பெய்துமோவென்றனருரைத்தார் (2)

கேட்டபட்டினத்தையருங்கிளர்மணிபாசப்பூண்
காட்டமூன்றுடைநாயகன்செயலெனநவின்று
தோட்டகொன்றைபைந்தொங்கலார்திருவருட்டொடர்பை
வேட்டிருந்தனமெழுந்தோர்சோதிமன்விரைந்தே. (3)

அந்தச்சோதியிற்பத்திரகிரிப்பெயரண்ணல்
சந்தபூண்முலைஞானவல்லித்தையலோடும்
இந்தப்பார்முடியெம்பிரானருளிறையிணையில்
கந்தப்பாமருதிடைமகாலிங்கத்திற்கலந்தார் (4)

### அறுசீரடியாசிரியவிருத்தம்.

அருமறைமுனிவரார்த்தாரமரர்பூமாரிதூர்த்தார்
இருநிலத்தவர்களெல்லாமின்பமாக்கடலிலாழ்ந்தார்
மருவியதிருவெண்காடர்மாமருதூரர்செய்ய
திருவருளதனையுள்ளிச்சேவடிபரவலுற்றார், (5)

### எழுசீரடியாசிரியவிருத்தம்

கற்றிலேன்கற்றோர் தம்மொடுங்கலவேன்கல வொரொடுங்கூ
டியேயலவாக். குற்றமேபுரிந்து திரிதருவேனின் குரைகழ
ற்காட்படலென்றோ, செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவ
னே திகழ்புலிப்பாலகனருந்த, வற்றிலாவமுதக்கடலினையீ
ந்தாய்மருதிடங்கொண்டமாமணியே. (6)

### அறுசீரடியாசிரியவிருத்தம்.

பூவார் கொன்றையுடனெருக்கும் புனிற்றுத்திங்களொ
டும்பாம்புந், தேவர்முடிபுனைபேதமரச்சேர்த்தன்மானப்பெ
ரியோர சொல. நாவார் துதி பெற்றநேன் செவியிறையேன்று
நியமேற்றநானவாய், மேவாக்கொடிய திருவிடைமாமருதூ
ர்மேயசிவக்கொழுந்தே. (7)

அஞ்சாதடுக்கலெடுத்தவம்பியரக்கன்றோள்களிறுபாணுக்
துஞ்சாவலறவிரலூன்றிச்சுருதிகேட்டுப்புரந்தனையால்
தஞ்சாவடைநதேன்செய்நிமைதவிர்த்துன்சரணந்தந்தருள்
வாய், மஞ்சார்பொழில்சூழிடைமருதவாணுமாசின்மாம
ணியே. (8)

யாமேபிரமமெனச்செருக்கிறும்தவயன்மாலல்லமெனத்
தாமேயுணரவிடையிற்றழலமாமலையாய்த்தனிவளர்ந்தா
ய், காமேவிபசுந்தண்டமார்நபிக்கந்தீரத்தநாயகனே
தீமேவியசெங்கரநாயேன்றீமையகற்றியாளவாயே. (9)

உள்ளமெவனென்னுள்ளத்து வுயிர்ப்பாய்ப்புறம்போந்துள்
புகுமக், கள்ளனெவனென்றறியாது கலங்காநின்றேன்க
ண்ணுதலே, யுள்ளமிசைதென்றுறக் காட்டியுனையுங் காட்டி
யாண்டருள்வாய். வெள்ளப்பழனஞ் சூழிடைமாமருதூர்
மேயவித்தகனே. (10)

ளனுயிராயுயிருள்ளுமுணர்வாயுள்ளும்புறமுமாய்
நானுலகாய் மற்றுமாய்நண்ணுநினையெங்ஙனம்புகழ்வேன்
வானுய்வளிதீநீர்மண்ணாய்மதிமார்த் தாண்டனியமானன்
தானாய்த்தனிமாலிங்கமாய்த்தழைந்த மருதூர்ச்சங்கரனே.

பூவின்மணஞ்செந்தீவெப்பம்புனலின்றட்பமெனவெவற்று
மேவியுளநின்றனைவேறுமேலோர்கண்டுதொழுகிற்பார்
பாவியெளியேனெவ்வாறுன்படிவங்கண்டுதொழுகிற்பேன்
காவியனகண்பெருநலமாமுலையோர்பாகங்கலந்தவனே. (12

வாசமலர்கொண்டருச்சனைசெய்மாணிதன்னைக்கவர்பொரு
ட்டுப், பாசம்வீசிவருகாலன் பதைப்பவுதைத்தபரம்பொரு
ளே, மாசினின்றருள்வணங்காதேன்மறலிவருநாளெனபுரிவே
ன, பூசத்துறைவன்பொன்னிநதிபொருந்துமருந்தூர்ப்புண்
ணியனே. (13)

பொறியின்வழிபோயுள்ளத்தைப்புலங்கண்மீது போகவிடுத்
தறிவுமாழ்கிகிடபபேற்குனனலர்த்தாட்காட்சியருள்வா
யோ, மறியுண்கண்ணிபெருநலமாமுலையாளோடுமகாலிங்க
க்க், குறியாய்மருதினிடங்கொண்டகோதின்ஞானக்குண
மலையே. (14)

மூவாமுதலாய்ச்சமயங்கண்முற்றுமாயச்சமயியர்கொள்
தேவாய்நினைவார்செல்வமாயச்சிநதிபபார்தந்தெள்ளமுதாய்
க், கோவாய்க்குணமாய்மகாலிங்கக்குறியாயுறைகின்றனையெ
ளியேன், காவாலெங்ஙன்வழிபடுவேன்மருதூரும்பர்நாயகனே

௸வேறு

வண்டமிழ்மாமுனிசொலிலக்கணமைந்துங்களிகொள்ள மரு
வுநாற்சொல், கொண்டன்பினுடன்புலவர்செவிக்கொளமும்ம
ணிக்கோவைக்கோதினூலை, மண்டுபுனற்பூம்புகார்வருவெ
ண்காட்டடிகண்மனமகிழ்நதுபாடித், தண்டலைசூழ்மருதூ
ரரிருதாளிலொருதொடையாச் சார்த்தினரே. (16)

௸வேறு

மாறாக்காதலுடன்மருதின்வளருமுக்கட்செங்கரும்பை
நீறூர்மேனிதிருமலனைநினையார்தம்மைநினையானைக்
கூறுரிமயக்கொடியோடுங்குறித்துபபரவிவலமாவந்
தாறாக்கண்ணீர் பெருக வெண்காட்டையரிதிற் புறம்போந்
தார். ௸வேறு (17)

பின்னர்மறைபூசித்துப்பேறடைந்தவேதவனம்பேணிப்புகு
க்கன்னல்வில்லேனறனைக்காய்ந்தகண்ணுதலாரெழிற்கமல
க்கழல்கள்போற்றிப், பொனனுலகத்திறைபூசைபுரிநதின்பப்
பேறடைந்தபுனிதவாரூர், தன்னிலுறைதியாகேசரடிபணி
ந்து வெண்காடுதன்னைச்சார்ந்தார். (18)

ஆங்குசிவனடியவருமந்தணருமுளங்களிப்பவமர்ந்து ஞானக்
கோங்கனையகுவிமுலையாளொடும்வெண்காட்டீசனடிகுமபிட்
டேத்திப், பாங்குபெறச்செந்தமிழிற்பாமாலை பலவியற்றிப்
பரன்றாள்சூடித், தேங்குபரிபூரணர்தந் திருவருளைக்குற்
றியோகஞ்செய்தங்குற்றார். (19)

முத்திச்சருக்கம் முற்றிற்று. ஆக திருவிருத்தம் 145.

பத்திரகிரியார்புராணம். முற்றிற்று.

| பக்கம். | சருக்க அகராதி |
|---|---|
| 1 | பாயிரம். |
| 3 | யாத்திரைச்சருக்கம். |
| 6 | ஞானோபதேசச்சருக்கம். |
| 11 | திருவவதாரச்சருக்கம். |
| 18 | திருவிடைமருதூர்ச்சருக்கம். |
| 26 | முத்திச்சருக்கம் |

## பிழைத் திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 2 | சமவர ... | சமயவர. |
| | 20 | கொடித்தில் ... | கொடிதறிற் |
| 11 | 24 | ப்பிரசாதப் ... | த்தாம்பெற்ற. |
| 13 | 16 | நிச்சயித்தனவென நெஞ்சிற்கபமும்... | நிச்சயிப்பித்தனவென்று நெஞ்சினில். |
| | 17 | றச்சமா ... | அச்சமா |
| 15 | 3 | வயிற்றில்வதித்துப் | வயிற்றிற்பெண்மகளாய் |
| | 5 | பிறந்தாள்புவியோர் கொண்டாட ... | பிறந்தனுலகம் போற்றி செய. |
| 16 | 13 | செம்பவா ... | செம்பவள |
| 19 | 32 | கனினாமேசகமைகயை | நாகரும்பேட்டோடை |
| 21 | 26 | சூழுதலே ... | சூழுதலோ |
| | 27 | ஜாதிக்கு ... | ஜாதிக்கு |
| 23 | 15 | குழுவினதா ... | குழாங்களினு |
| | 21 | வேளான் ... | வேளாண் |
| 24 | 10 | காய்ப்பாடி ... | காப்பாடி |
| | 17 | தமிர்தீர்த்த ... | மிர்தநீர்த்த |